SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

**(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)**



# பி.எஸ். குமாரசாமி ராஜா


SHANKAR IAS ACADEMY

AP-2241, 2nd Floor, 12th Main Road,

Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.

www.shankariasacademy.com

Email : tnpscfeedback@shankarias.in

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 5. பி.எஸ். குமாரசாமி ராஜா

### இளம் பருவம்

- இவர் 1898 ஜூலை 8 இல் இராஜபாளையத்தில் பிறந்தார்.
- இவரின் பெற்றோர்: 'பூசப்பாடி' சஞ்சிவிராஜா - முத்தம்மாள்.
  - பூசப்பாடி என்பது இவர்களின் முன்னோர்களின் ஊர்ப் பெயராகும்.
- இவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள **இந்து உயர்நிலைப்பள்ளியில்** கல்வி பயின்றார்.

### சுயராஜ்ய பாளையம்

- அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்தின் (Home Rule League) செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு அதில் இணைந்து இவர் செயல்பட்டார்.
- இவர் தன்னாட்சி இயக்கத் தலைவர்களுள் ஒருவரான **B.P. வாடியா** அவர்களை சிறப்பு விருந்தினராக அழைத்து ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் இராஜபாளையத்தில் **"தன்னாட்சி கூட்டங்களை"** (Home Rule Meetings) நடத்தினார்.
- அன்னிபெசன்ட் அம்மையாரின் **எழுத்திலும்** எஸ். சத்தியமூர்த்தியின் **மேடைப் பேச்சிலும்** ஈர்க்கப்பட்டார் குமாரசாமி.
- 1919 இல் இவர் **முதன்முறையாக காந்தியடிகளை** சந்தித்த பின்னர் தன்னை முழுமையாக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்டார்.
- 1919 இல் நடைபெற்ற ரௌலட் சத்யாகிரகத்தில் (Rowlatt Satyagraha) இவர் பங்கேற்றார்.
- 1920 இல் சென்னையில் நடைபெற்ற **முதலாவது கிலாபத் மாநாட்டின்** (First Khilafat Conference) வரவேற்புக் குழுவின் (Reception Committee) **துணைத் தலைவராக** குமாரசாமி ராஜா இருந்தார்.

SHANKAR IAS ACADEMY

- இவர் 1921 ஆம் ஆண்டு இராஜபாளையம் வட்டார அளவில் **‘விவசாயிகள் கழகம் மற்றும் அரிசன சங்கம்’** (Peasants Association and Harijan Sangh) என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.
- குமாரசாமி ராஜாவும் அவரின் **அரசியல் குருவான I.B. அரங்கசாமி ராஜாவும்** ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக செயல்பட்டனர்.
    - இராஜபாளையத்தில் காங்கிரஸ் கமிட்டியை தொடங்கியவர் - I.B. அரங்கசாமி ராஜா.
- இவர் **தீண்டாமை ஒழிப்பு** மற்றும் **கதர்துணி பயன்படுத்துதல்** போன்றவற்றை ஆதரித்து தீவிரமாக பிரச்சாரம் செய்தார்.
- 1925 ஆம் ஆண்டு இவர் இராஜபாளையத்தில் காந்தியின் பிறந்தநாள் விழாவை ஏற்பாடு செய்தார். இதில் கலந்து கொண்ட **எஸ். சீனிவாச அய்யங்கார்** “குமாரசாமி ராஜாவின் செயல்பாடுகளால் இராஜபாளையம் நகரானது **சுயராஜ்ய பாளையம்** என ஆகி விட்டது” என புகழ்ந்தார்.

## தென்னக காந்தி

- 1927 ஆம் ஆண்டு இவரால் இராஜபாளையத்தில் உருவாக்கப்பட்ட **‘காந்தி கதர் வஸ்தராலயம்’** (Gandhi Khaddar Vastralayam) என்னும் நிறுவனமானது காந்தியடிகளால் துவக்கி வைக்கப்பட்டது.
    - இந்த நிறுவனமானது 1929 இல் **அனைத்திந்திய கைராட்டின சங்கத்துடன்** (All India Sarka Sangh) இணைக்கப்பட்டது.
- இவர் சைமன் குழு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- இவர் **அகில இந்திய சர்வோதய சங்கத்தின்** கிளையை தமிழகத்தில் **முதல்முறையாக** இராஜபாளையத்தில் உருவாக்கினார்.
- 1931 இல் சட்டமறுப்பு இயக்கத்தில் (Civil Disobedience Movement) பங்கேற்ற இவர் **அந்நிய துணி** புறக்கணிப்பு மற்றும் **கள்ளுக் கடை மறியல்** போன்றவற்றில் ஈடுபட்டார்.
- குமாரசாமி ராஜாவின் செயல்பாடுகளால் பிரிட்டிஷ் அரசானது இராஜபாளையத்தை **“அச்சமூட்டும் நகரம்”** என குறிப்பிட்டது.

SHANKAR IAS ACADEMY

- இவர் 1931 இல் **கராச்சி காங்கிரஸ் கூட்டத் தொடரில்** (Karachi Congress Session) பங்கேற்றார்.
    - இதில் **வரிகொடா இயக்கம்** தொடங்குவது தொடர்பான ஒரு கோரிக்கையை இவர் முன்மொழிந்தார்.
    - கூட்டத் தொடர் தலைவர் - **சர்தார் வல்லபாய் பட்டேல்**.
- இவர் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சதி செய்ததாக குற்றம் சாட்டி 1932- இல் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- இவர் எழுதிய **My Introduction As a Gandhian** என்னும் நூல் பலரது கவனத்தைப் பெற்றது.
- இவர் இராஜபாளையம் மக்களால் **தென்னக காந்தி** என அழைக்கப்பட்டார்.

## மக்களின் பிரதிநிதி

- 1934 இல் மத்திய சட்டமன்றத்திற்கு (Central Legislative Assembly) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
    - அப்பொழுது காங்கிரஸ் தேர்தலில் அதிகாரப்பூர்வமாக போட்டியிடவில்லை.
- 1937 இல் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு (Provincial Legislative Council) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1938 இல் குமாரசாமி ராஜாவின் ஏற்பாட்டினால் **40 வது தமிழ்நாடு மாகாண அரசியல் மாநாடு** ஆனது இராஜபாளையத்தில் நடைபெற்றது.
    - மாநாட்டின் தலைவர் – **'ஓமந்தூர்' ராமசாமி.**
- 1940 இல் தனிநபர் சத்யாகிரகத்தில் கலந்து கொண்ட இவருக்கு **9 மாத சிறை தண்டனை** விதிக்கப்பட்டது. (திருச்சி சிறை)

SHANKAR IAS ACADEMY

## அமைச்சர் முதல் ஆளுநர் வரை

- இவர் 1946 இல் சட்டமன்றத் தேர்தலில் **ஸ்ரீவில்லிபுத்தூர்** தொகுதியிலிருந்து போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் **டி.பிரகாசம்** தலைமையிலான அமைச்சரவையில் **வேளாண்மை**, **பொதுப்பணி**, **கூட்டுறவு** போன்ற துறைகளின் அமைச்சராக பணியாற்றினார்.
- இவர் விவசாயத்துறை அமைச்சராக இருந்த பொழுது **விவசாய வருமான வரிச் சட்டம்** ஒன்றை கொண்டு வந்தார்.
    - இதன் மூலம் ஒரு ஆண்டில் **ரூ.5,000** ற்கும் மேல் வருமானம் ஈட்டும் விவசாயிகளுக்கு மட்டும் வருமான வரி விதித்தார்.
- சென்னையை (அடையாறு) தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட **இந்துஸ்தான் சாரணர் கழகத்தின்** (Hindustan Scout Association) தலைவராக இவர் இருந்தார்.
- பின்னர் பிரகாசத்தின் அமைச்சரவையில் இருந்து கருத்து வேறுபாடு காரணமாக ராஜநாமா (பதவி விலகல்) செய்தார்.
- இந்தியா விடுதலை பெற்ற பொழுது அந்நாளை இவர் இராஜபாளையத்தில் விமர்சையாக கொண்டாடினார்.
- இவர் கூட்டுறவு வங்கிகளை தோற்றுவித்து வெற்றிகரமாக நடத்தி வந்தார்.
    - இராஜபாளையத்தில் உள்ள **பூபதி ராஜா கூட்டுறவு வங்கி** ஆனது குமாரசாமி ராஜா அவர்களின் முயற்சியின் விளைவாக உருவாக்கப்பட்டது.
    - 1948 இல் இவர் **இராஜபாளையம் கூட்டுறவு வீட்டு வசதி கழகத்தை** (Rajapalayam Co-operative Housing Society) தொடங்கினார்.
- இவர் இராஜபாளையத்தில் **காந்தி கலை மன்றம்** என்ற அமைப்பை உருவாக்கினார்.
- ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்த பொழுது தஞ்சாவூர் பகுதிகளில் பண்ணையார்களுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் பெரும் மோதல் ஏற்பட்டது. இதனை குறித்து ஆராய (விசாரணை செய்ய) **குமாரசாமி ராஜா** தலைமையில் ஒரு **ஆணையம்** ஏற்படுத்தப்பட்டது.
    - இதன் உறுப்பினர்கள் - சி. சுப்ரமணியம், ஆர் வெங்கட்ராமன்.

SHANKAR IAS ACADEMY

- இந்த ஆணையம் இரு தரப்பினர் இடையேயும் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து தனது பரிந்துரைகளை அரசிடம் சமர்பித்தது.

➢ ஓமந்தூர் ராமசாமி அவர்கள் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் இவர் 1949 ஏப்ரல் 6 இல் முதலமைச்சர் ஆனார். இவரின் அமைச்சரவை:

- டி.எஸ்.எஸ். ராஜன்
- எம். பக்தவத்சலம்
- எம். சீத்தாராம ரெட்டி
- கே. சந்திரமௌலி
- பெசவாடா கோபால ரெட்டி
- கே. மாதவ மேனன்
- காலா வெங்கட்ராவ்
- ஏ.பி. ஷெட்டி
- பி. பரமேஸ்வரன்
- சி.பெருமாள் சாமி
- ரோச்சா விக்டோரியா
- நீலம் சஞ்சிவ ரெட்டி.

➢ 1950 ஜனவரி 26 இல் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின் (குடியரசு நாடு) **சென்னை ராஜதானி** ஆனது **சென்னை மாகாணம்** என ஆனது.

- நாடு குடியரசு ஆன பொழுது தமிழகத்தின் (சென்னை மாகாணம்) முதலமைச்சர் ஆக இருந்தவர் பி.எஸ். குமாரசாமி ராஜா ஆவார்.

➢ இவருக்கு முன் முதலமைச்சராக இருந்த ஓமந்தூரார் 1948 இல் ஜமின்தாரி ஒழிப்புச் சட்டத்தை கொண்டு வந்தார். ஆனால் பல்வேறு நடைமுறை சிக்கல் காரணமாக முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாமல் இருந்தது.

- இதனை துணிச்சலாக செயல்படுத்திக் காட்டியவர் குமாரசாமி ராஜா ஆவார்.

SHANKAR IAS ACADEMY

- சென்னை மாகாணத்தில் இருந்த ஜமின் தாரிப் பண்ணைகள் **அரசுடைமையாக்கப்பட்டன**. பிறகு இது முறையாக அளிக்கப்பட்டு பட்டா மூலமாக நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

➢ ஓமந்தூரார் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட முழுமதுவிலக்கு, ஆதிதிராவிடருக்கென (தனி) நலத்துறை, நிலச்சீர்திருத்தம் ஆகியவை இவர் முதலமைச்சராக இருந்த பொழுது நடைமுறைக்கு வந்தது.

➢ இவர் ஆட்சியின் பொழுது 1949 இல் மாவட்ட அளவிலான நீதிமன்றங்கள் நிர்வாகத்தின் (Executive) கட்டுப்பாட்டில் இருந்து பிரிக்கப்பட்டு உயர்நீதி மன்றத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

- இதன் மூலம் மாவட்ட நீதித்துறை சுதந்திரமாக செயல்பட வழி கிடைத்தது.

➢ இவர் ஆட்சியின் பொழுது 1949 செப்டம்பர் 6 இல் பல்வேறு காரணங்களால் சென்னை மாகாணத்தில் பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்பட்டது.

➢ இவர் ஆட்சியின் பொழுது **செண்பகம் துரைராஜன் வழக்கில்** மெட்ராஸ் உயர் நீதிமன்றம் சென்னை மாகாணத்தில் பின்பற்றப்படும் வகுப்புவாரி இடஒதுக்கீடு **செல்லாது** என தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து இவர் தலைமையிலான அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்சநீதிமன்றமானது மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தது.

- சென்னை மாகாண முதலமைச்சர் என்ற வகையில் மத்திய அரசிடம் மக்களின் உரிமையை எடுத்துக்கூறி **முதலாவது திருத்தச் சட்டம்** (First Amendment Act) உருவாக இவர் முக்கிய பங்காற்றினார்.
- இதற்காக மக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தவர்கள் - **பெரியார், அண்ணா**.
- இதற்காக அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களிடம் வலியுறுத்தியவர்கள் - **குமாரசாமி ராஜா** மற்றும் **காமராசர்**.

➢ 1952 இல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் இவர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

➢ 1954 முதல் 1956 வரை **ஒரிசா மாநில ஆளுநராகப்** பணியாற்றினார்.

➢ 1955 இல் இவர் இராஜபாளையத்தில் **காங்கிரஸ் பொன்விழா மைதானத்தை** உருவாக்கினார்.

SHANKAR IAS ACADEMY

- தொடங்கி வைத்தவர் - **இராசேந்திர பிரசாத்**.

➢ இவர் 1957 மார்ச் 15 இல் இயற்கை எய்தினார்.

* * * * * * * * *

SHANKAR IAS ACADEMY